பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**18 09 2026** **FRIDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** உடல் நலன் மட்டுமின்றி மன நலனையும் சீராக பராமரிக்க யோகா பயிற்சி உதவிடும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

**2.** முதலீட்டிற்கு உகந்த நாடுகள் பட்டியலில் இந்தியா முதலிடத்தில் உள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

**3.** திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் இரண்டு அணிகளுக்கு புதிய பெயர் மற்றும் சின்னங்களை தேர்தல் ஆணையம் வழங்கியுள்ளது.

**4.** பாகிஸ்தானில் நேரிட்ட குண்டுவெடிப்பு சம்பவத்தில் 15 பேர் உயிரிழந்தனர், 50 பேர் காயமடைந்தனர்.

**5.** போலந்து சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஆனந்தாஸ் ராஜ்குமார் மற்றும் **Muskaan Khan** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

- இனி விரிவான செய்திகள் - -

<<<<<>>>>>>

உடல் நலன் மட்டுமின்றி மன நலனையும் சீராக பராமரிக்க யோகா பயிற்சி உதவிடும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

**Lonavala**-வில் யோகா கல்லூரி ஒன்றின் பவளவிழா கொண்டாட்டங்களில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

இந்த கல்வி நிறுவனம் **75** ஆண்டுகளாக யோகா கல்வி மற்றும் அதுதொடர்பான ஆராய்ச்சிக்கு பங்களித்து வருவதாக அவர் கூறினார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக சர்வதேச அளவில் யோகா பிரபலமடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன் அடிப்படையிலேயே சர்வதேச யோகா தினம் ஆண்டுதோறும் ஜூன் மாதம் **21**-ஆம் தேதி கொண்டாடப்படுவதையும் திரு சி பி ராதாகிருஷ்ணன் சுட்டிக்காட்டினார்.

<<<<<>>>>>>

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அதிபர் **Sheikh Mohamed Bin Zayed Al Nahyan,** பிரதமர் திரு நரேந்திர மோடியை தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினார்.

பிரிக்ஸ் உச்சிமாநாட்டை வெற்றிகரமாக நடத்தியதற்காக பிரதமருக்கு ஐக்கிய அரபு எமிரேட் அதிபர் வாழ்த்து தெரிவித்ததாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இருநாடுகளுக்கு இடையேயான பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்தும் விவாதிக்கப்பட்டதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

செமி கண்டெக்டர் துறை ஒரு லட்சத்திற்கும் கூடுதலான புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுவதாக மத்திய அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், செமிகான் உச்சிமாநாட்டில் மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றதாக தெரிவித்தார்.

செமி கண்டெக்டர் வடிவமைப்புத் தொடர்பாக பொறியியல் மாணவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட உள்ளதாகவும் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்

<<<<<>>>>>>

முதலீட்டிற்கு உகந்த நாடுகள் பட்டியலில் இந்தியா முதலிடத்தில் உள்ளதாக மத்திய தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ்கோயல் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இந்தியாவில் உள்ள ஸ்வீடன் வர்த்தக சபை ஆய்வறிக்கையில், இது குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

சர்வதேச அளவில் சிக்கலான சூழல் நிலவி வந்தபோதிலும், முதலீடு செய்வதற்கு உகந்த நாடாக இந்தியா திகழ்வதாகவும் திரு பியூஷ்கோயல் கூறியுள்ளார்.

<<<<<>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க நாட்டு மக்கள் அனைவரும் உறுதியேற்றுக்கொள்ள வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ கேட்டுக்கொண்டுள்ளார்.

புதுதில்லியில் பிஜேபி சார்பில் நடைபெற்ற சேவை உறுதிமொழி இயக்கத்தில் பங்கேற்று அவர் பேசினார்.

மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர் கட்டமைப்பு வசதிகள் இதுவரை இல்லாத அளவிற்கு மேம்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தொலைதூர எல்லைப்பகுதிகளிலும் சாலை வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

நாடு முழுவதும் 80 கோடிக்கும் மேற்பட்டோர் இலவச உணவு தானியங்களை பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

வளர்ச்சியின் பலன்கள் அனைத்துத் தரப்பினரையும் சென்றடைந்திருப்பதாகவும் திரு கிரண் ரிஜிஜூ கூறினார்.

<<<<<>>>>>>

நடப்பு நிதியாண்டில் இதுவரை நேரடி வரிவசூல் **13** சதவீதம் அதிகரித்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

முன்கூட்டியே வரி செலுத்துவதும் **16** புள்ளி ஒன்று எட்டு சதவீதமாக அதிகரித்துள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதன்படி, நேரடி வரி வசூல் **12** லட்சத்து **12** ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு அதிகரித்துள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**2** லட்சத்து **20** ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு கூடுதல் வரி திருப்பி வழங்கப்பட்டுள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் இரண்டு அணிகளுக்கு புதிய பெயர் மற்றும் சின்னங்களை தேர்தல் ஆணையம் வழங்கியுள்ளது.

மேற்குவங்கத்தில் இரண்டு சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு நடைபெறவுள்ள இடைத்தேர்தலில், **Arup Roy** தலைமையிலான அணிக்கு, ஜனநாயக திரிணாமுல் காங்கிரஸ் என்ற பெயர் வழங்கப்பட்டு, காகித உறை சின்னம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மம்தா பானர்ஜி தலைமையிலான அணிக்கு, மம்தா ஆல் இண்டியா திரிணாமுல் காங்கிரஸ் என்ற பெயர் வழங்கப்பட்டு, கால்பந்து வீரர் சின்னம் ஒதுக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

பஞ்சாபில் சட்டம் — ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக பிஜேபி மற்றும் காங்கிரஸ் குற்றம் சாட்டியுள்ளன.

மாநிலத்தில் ஆம் ஆத்மி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர், சட்டம் — ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படவில்லை என்று பிஜேபி மூத்த தலைவர்களில் ஒருவரான திரு **Manoranjan Kalia** கூறியுள்ளார்.

செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்த அவர், குற்றச்சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக கூறி அவற்றை பட்டியலிட்டார்.

காங்கிரஸ் கட்சியின் திரு **Rajkumar Verka**-வும் சட்டம் — ஒழுங்கை முறையாக பராமரிக்க ஆம் ஆத்மி தவறிவிட்டதாக குறை கூறினார்.

காவல்துறையினருக்கே பாதுகாப்பு இல்லாத சூழல் நிலவுவதாகவும் அவர் சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ளார்.

உதவி துணை ஆய்வாளர் கொல்லப்பட்ட சம்பவத்தையும் திரு **Rajkumar Verka** சுட்டிக்காட்டியுள்ளார்.

<<<<<>>>>>>

மகாராஷ்ட்ராவில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருவதாக அம்மாநில முதலமைச்சர் திரு தேவேந்திர பட்நவிஸ் கூறியுள்ளார்.

இன்று மும்பையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலத்தில் நிலவும் வறட்சி போன்ற சூழலை அரசு உன்னிப்பாக கண்காணித்து வருவதாகவும் தெரிவித்தார்.

இப்பிரச்சினை தொடர்பாக தேசியவாத காங்கிரஸ் கட்சியின் திரு சரத்பவார் தமக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள யோசனைகளையும் அரசு பரிசீலித்து வருவதாக கூறினார்.

விவசாயிகளின் நலன்களை பாதுகாப்பதில் தமது அரசு உறுதியுடன் உள்ளதாகவும் திரு தேவேந்திர பட்நவிஸ் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

சத்தீஸ்கட்டில் தொழில்துறையின் வளர்ச்சிக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு விஷ்ணு தேவ் சாய் கூறியுள்ளார்.

ராய்பூரில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், சத்தீஸ்கட்டில் முதலீடு செய்வதற்கு உகந்த சூழல் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக கூறினார்.

இதனை முதலீட்டாளர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் திரு விஷ்ணு தேவ் சாய் கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>>>

புதுமை கண்டுபிடிப்புகளுக்கு அஸ்ஸாம் அரசு ஊக்கம் அளித்து வருவதாக அம்மாநில முதலமைச்சர் திரு ஹிமந்த பிஸ்வ சர்மா கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இதன் அடிப்படையில் அஸ்ஸாமில் மூங்கில் சைக்கிள் அறிமுகப்படுத்தப்பட உள்ளதாக தெரிவித்தார்.

குவஹாத்தியில் அக்டோபர் 2-ஆம் தேதி இந்த மூங்கில் சைக்கிள் காட்சிப்படுத்தப்பட உள்ளதாகவும் அவர் கூறினார்.

மூங்கில் தொடர்பான புதுமை கண்டுபிடிப்புகளில் தொழில்துறையினர் ஈடுபட வேண்டும் என்றும் திரு ஹிமந்த பிஸ்வ சர்மா கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>>>

ஆந்திரப்பிரதேச முதலீட்டு மேம்பாட்டு வாரியம் 526 கோடி ரூபாய் மதிப்பிலான 10 திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

இன்று அமராவதியில் முதலமைச்சர் திரு சந்திரபாபு நாயுடு தலைமையில் நடைபெற்ற இந்த வாரியத்தின் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதன்மூலம், 8 ஆயிரத்திற்கும் மேற்பட்ட புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்று அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<>>>>>>

வர்த்தக உறவுகளை மேலும் வலுப்படுத்துவதென இந்தியாவும், தாய்லாந்தும் முடிவு செய்துள்ளன.

தாய்லாந்திற்கான இந்திய தூதர் திரு Puneet Agarwal, அந்நாட்டு துணைப்பிரதமர் திருமதி Suphajee Suthumpun-ஐ சந்தித்து இதுதொடர்பாக பேச்சு நடத்தினார்.

முதலீட்டிற்கான வாய்ப்புகள் குறித்தும் இந்த சந்திப்பின்போது விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>>

பாகிஸ்தானில் நேரிட்ட குண்டுவெடிப்பு சம்பவத்தில் 15 பேர் உயிரிழந்தனர், 50 பேர் காயமடைந்தனர்.

Khyber Pakhtunkhwa மாகாணத்துக்கு உட்பட்ட மசூதி அருகே இந்த குண்டுவெடிப்பு சம்பவம் நேரிட்டதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

அப்பகுதியில் மீட்புப்பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த செய்திகள் தெரிவிக்கின்றன.

<<<<<<>>>>>>

போலந்தில் நடைபெற்றுவரும் சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Muskaan Khan** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், **3-21, 21-8, 21-18** என்ற செட் கணக்கில், செக் குடியரசின் **Lucie Krulova-**வை வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில், ஆனந்தாஸ் ராஜ்குமார் **21-23, 21-17, 21-14** என்ற செட் கணக்கில், ஸ்வீடனின் **Tim Mork-**ஐ வென்று காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறினார்.

---------------

ஆசிய விளையாட்டுப் போட்டியின் தொடக்க விழாவின் வீரர்கள் அணிவகுப்பின்போது இந்தியாவின் சார்பில் தேசியக் கொடியை மனுபாக்கர் மற்றும் **Tajinderpal Singh Toor** ஏந்திச் செல்வார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானில் இப்போட்டி நாளை தொடங்குகிறது.

பல்வேறு பிரிவுகளில் தொடக்க சுற்று ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

மகளிர் டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டி காலிறுதி ஆட்டத்தில் இந்தியா **8** விக்கெட் வித்தியாசத்தில் ஜப்பானை வென்று அரையிறுதிக்கு முன்னேறியது.

**Teqball** போட்டியின் ஒற்றையர் பிரிவில் **Quimcy Dsouza** அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளார்.

**<<<<<END>>>>>>**